**04.01.2024**
***OS 139/2022***
**வா.சா.1 முத்துராமலிங்கம்**
**5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

இந்த வழக்கில் நான்தான் வாதி. இந்த வழக்கு சம்மந்தமான அனைத்து விசயங்களும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என்னுடன் உடன் பிறந்தவர்கள் 5ஆண்கள், 3 பெண்கள். இந்த வழக்கில் தரப்பினர்களாக என் உடன் பிறந்த ஆண் வாரிசுகளை மட்டும்தான் சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1-ல் பெண்வாரிசுகளை நான் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். 3பெண்மக்கள் உயிருடன்தான் உள்ளனர். இந்த வழக்கில் மேற்படி 3 பெண்மக்களை சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த சொத்தை எங்களுக்கு(ஆண்வாரிசுகளுக்கு) என் அப்பா எழுதி வைத்தது, அதில் பெண்மக்களுக்கு எவ்வித சம்மந்தமுமில்லை. அவ்வாறு என் அப்பா எழுதி வைத்தது சம்மந்தமாக பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் எதுவும் இல்லை. யுடிஆர் சமயத்தில் அவ்வாறு 5பேருக்கும் மாற்றி கொடுத்தார். அவ்வாறு மாற்றி கொடுத்த யுடிஆர் சம்மந்தப்பட்ட ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வதுபோல யுடிஆர் சம்மந்தப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடன் உடன் பிறந்தவர்கள் பெயரில் உள்ள பட்டா ஆவணங்களை மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் அப்பா பெயருக்கு மொத்தம் 3 ஏக்கர் 75 செண்ட் பாத்தியம். தற்போது ஆண்மக்கள் 5 பேரும் தனித்தனியாக 3 ஏக்கர் 75 செண்டை பிரித்துக்கொண்டோமா என்றால் இல்லை. மொத்தமாகத்தான் உள்ளது. 13.12.2023ல் 1, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையில் தலா 75 செண்டை பிரித்துக்கொண்டோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 3 ஏக்கர் 75 செண்டில் நாங்கள் 5பேரும் நாங்கள் ஏற்கனவே பாகம் பிரித்துக்கொண்டு அதில் 75 செண்டை நான் தனியாக அனுபவம் செய்து வருகிறேன் என்று என்னுடைய வழக்குரையின்படியே சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எவ்வளவு செண்ட் ஒதுக்கப்பட்டு விவசாயம் செய்து வருகிறேன் என்றால் மொத்த சொத்தும் விவசாயம் எதுவும் செய்யவில்லை, அப்படியேதான் உள்ளது. எனது அப்பா இறந்து சுமார் 30 வருடமிருக்கும். 3 ஏக்கர் 75 செண்டில் நாங்கள் 5பேரும் 1999ல் ஏற்கனவே பாகம் பிரித்துக்கொண்டு அதில் 75 செண்டை நான் தனியாக அனுபவம் செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. அதனடிப்படையில் எனக்கு சர்வே 377/5ல்

68 செண்டும், அதை ஒட்டியுள்ள **377/4B1**-ல் 17செண்ட் என்னுடைய சுவாதீன அனுபவத்தில்தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. 5வது பிரதிவாதி மேற்படி சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பாக என்னிடம் மேற்படி சொத்தை கிரையம் பெறுவதற்காக என்னிடம் வாய்மொழியாக கேட்டபோது, நான் எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்டுவிட்டது என்றும், எனவே இந்த சொத்துக்களுக்கும் எனக்கும் எவ்வித சம்மந்தமுமில்லை என்று நான் சொல்லிவிட்டேன் என்றால் சரியல்ல. அந்த சொத்தை பதிவு செய்யும்போது எனது மனைவியும், மாமனாரும் உடன் இருந்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சொத்தை விற்றுவிட்டார்கள் என்று மறுப்பதற்காக சென்றார்கள். மேற்படி சொத்தை பதிவு செய்த பின்னிட்டு மேற்படி சொத்தை அளவீடு செய்வதற்காக 31.07.2012ல் வட்டாச்சியர் அலுவலகத்தின் அறிவிப்புபடி 11.08.2012ல் 5வது பிரதிவாதி வாங்கிய சொத்துக்களை அளவீடு செய்ய போகிறோம் என்றும், அதற்கு ஆட்சேபனை உள்ளதா என்று கேட்டு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு நோட்டீஸ் வந்ததாக எனது அண்ணன் சொன்னார். 11.08.2012ல் நோட்டீஸ்படி அளப்பதற்கு எனது மனைவியும், மாமனாரும் ஸ்தலத்தில் உடனிருந்தனர் என்றால் அளக்கவிடாமல் தடுத்துவிட்டார்கள். அவ்வாறு அளக்கவிடாமல் தடுத்ததற்காக அந்த நோட்டிசிற்கு நான் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவில்லை. அவ்வாறு வட்டாச்சியர் அலுவலகத்திலிருந்து அளக்க வந்தபோது எனது மனைவியும், மாமனாரும் எங்கள் சொத்தை விட்டுவிட்டு அளப்பதில் எங்களுக்கு ஆட்சேபனையில்லை என்று நிலஅளவையரிடம் தெரிவித்தனர் என்றால் சரியல்ல. இந்த சொத்து 5ம் பிரதிவாதிக்கு மாற்றம் செய்யப்பட்டுவிட்டது என்று 2012லேயே எனக்கு தெரிந்துவிட்டது என்றால் சரிதான். 2012லிருந்து மேற்படி பத்திரத்தின் மீது ஆட்சேபனை தெரிவித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல, நடவடிக்கை எடுத்தேன். எப்போது வந்து நடவடிக்கை எடுத்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. பத்திர அலுவலகத்தில் ஆட்சேபனை தெரிவித்தேன். எப்போது கொடுத்தேன் என்று ஞாபகமில்லை. எப்போது அவ்வாறு நடவடிக்கை எடுத்தேன் என்று எனக்கு நன்கு தெரியும் என்றும், அந்த ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றும், தற்போது அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 14.02.2022ல்தான் மாவட்ட பதிவாளருக்கு வா.சா.ஆ.12 படி நான் ஆட்சேபனை தெரிவித்துள்ளேன் என்றால் ஞாபகமில்லை. கருங்காலக்குடி சார்பதிவாளருக்கு 2022ல் மனு கொடுத்துள்ளேன் என்றால் ஞாபகமில்லை. தற்போது வழக்கு சொத்திற்கு பட்டா 5ம் பிரதிவாதி பெயரில்தான்

உள்ளது. அதை எதிர்த்து நான் வருவாய் அதிகாரியிடம் மேல்முறையீடு செய்துள்ளேன் என்றால் செய்துள்ளேன். அதற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை. 2012ல் 5ம் பிரதிவாதி சொத்தை வாங்கிய பிறகு சொத்தில் ஜேசிபி வைத்து நிலத்தை சமப்படுத்தினார் என்றால் அவர் வரவேயில்லை. அந்த சமயத்தில் சொத்தின் மதிப்பு குறைவாக இருந்தது என்றும், தற்போது சொத்தின் மதிப்பு கூடிவிட்டதால் தற்போது வேண்டுமென்றே வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் யாரும் விவசாயம் செய்யவில்லை என்பதற்கு நீதிமன்றம் மூலம் ஆணையாளரை நியமித்தால் அது தெரிந்துவிடும் என்றால் அது சும்மாகத்தான் உள்ளது. தட்டை பயிறு விதைத்துள்ளார்கள். பாகப்பிரிவினைபடி எனக்கு 75 செண்ட் ஒதுக்கப்பட்டுவிட்டதால்தான் மேற்படி சொத்தில் 5ம் பிரதிவாதி விவசாயம் செய்து வருவதற்கு நான் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி சரியான முறையில்தான் சொத்தை கிரையம் பெற்றுள்ளதால்தான் அவருடைய கிரைய பத்திரத்தை ஆட்சேபனை செய்வதற்கு எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 2012லேயே சொத்தை விற்ற விவரம் எனக்கு தெரிந்துவிட்ட நிலையில் தற்போது காலதாமதமாக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டள்ளதால் இவ்வழக்கு காலதோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் அம்மா பெயரில் 6 ஏக்கர் உள்ளது என்றும், அதை நாங்கள் 5பேரும் பிரித்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. தரிசாகத்தான் உள்ளது. 5ம் பிரதிவாதி வாங்கிய சொத்து ஏற்கனவே 1999ல் பாகப்பிரிவினை செய்யப்பட்ட சொத்து என்றும், என் அம்மா இறந்த பிறகு அந்த சொத்தையும் நாங்கள் பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றும், அதை மறைத்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி வழக்கு சொத்தை அவரது மனைவி பெயரில் பதிவு செய்வதற்கு முன்பாக என்னிடம் சரியான முறையில் தகவல் சொல்லி கேட்டார் என்றும், அதற்கு நான் ஆட்சேபனையில்லை என்று தெரிவித்தேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து கிரையம் பதியப்பட்டது தெரிந்துகொண்டும், தெரியாதது போல நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமான உண்மை விவரங்கள் தெரிந்தும், பொய்யான விவரங்களை தெரிவித்து சாட்சியம் அளிக்கிறேன் என்றும், எனவே வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

ஒப்பம்-S.கணேசன்
சார்பு நீதிபதி
மேலூர்